DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 30 of 2023** |
| Deposition of witness | : | **PW3** |
| Name | : | **கருப்பசாமி** |
| Father Name | : | **ஆறுமுகம்** |
| Age | : | **72** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 24.09.2025.

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். நான் அதில் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஒன்றாம் பாதியை சோமசுந்தரம் எப்போது எங்கு வைத்து திருமணம் செய்து கொண்டார் என்றால் வடுக பாளையத்தில் வைத்து 1985 ல் திருமணம் செய்து கொண்டார் ஆனால் தேதி தெரியவில்லை. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள். அவர்கள் எந்த தேதியில் எங்கு பிறந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சோமசுந்தரம் எப்போது வீட்டை விட்டு போனார் என்றால் 25.02.2006 தேதியில் சென்றார். அவர் எதுவரையில் படித்துள்ளார் என்றால் பிளஸ் ஒன் வரை படித்துள்ளார். அவர் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் பர்னிச்சர் கடையில் வேலைக்கு சென்று கொண்டிருந்தார். பொதுவாக சோமசுந்தரம் திருவண்ணாமலை கோவிலுக்கு செல்வது வழக்கம், அவ்வாறு சென்று விட்டு ஒரு வருடம் கழித்து கூட வந்துள்ளார்.

2. கடந்த 2006ல் கூட அவ்வாறு அவர் திருவண்ணாமலை சென்றிருக்க வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. மேற்படி சோமசுந்தரத்தின் சகோதரர் பெயர் குமாரசாமி, அவருக்கு ஒரு சகோதரியும் உள்ளார் ஆனால் பெயர் தெரியவில்லை. மேற்படி இருவருள்

அவரது சகோதரர் இறந்து விட்டார். அவரது சகோதரியை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். அவரை தேட எங்களது தரப்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அடிக்கடி அவர் திருவண்ணாமலையில் செல்லும் இடங்களில் சென்று தேடிப் பார்த்தோம் ஆனால் கிடைக்கவில்லை. அவர் காணாமல் போனது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் முதலில் புகார் கொடுக்கவில்லை, பின்னிட்டு புகார் கொடுத்துள்ளோம். அவர் காணாமல் போனது சம்பந்தமாக துண்டு பிரச்சாரமும், நாளிதழ் விளம்பரமும் கொடுத்தோமோ என்றால் இல்லை.

3. பொன்மணி திருமணத்திற்கு முன்னதாக அவிநாசியில் வசித்து வந்தார், திருமணத்திற்கு பின்பு விஜயமங்கலம் ரோட்டில் வசித்து வருகிறார். பொன்மணி செங்கப்பள்ளியில் வசித்து வந்ததாக சொல்லி இருந்தால் அது தவறு என்றால் தவறுதான். நான் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால்  சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.09.24 20:20:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.